**செய்தி வெளியீடு எண்.25 / 2021** **நாள் : 21.10.2021**

**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்**

**மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு. கே. என். நேரு அவர்கள் 21.10.2021 அன்று கோடம்பாக்கம் மண்டலம், நெசப்பாக்கம் கழிவுநீர் நிலையத்தில் அமைக்கப்பட்டு வரும் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலைய கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு. கே. என். நேரு அவர்கள் கோடம்பாக்கம் மண்டலம், அண்ணா பிரதான சாலை - எம்ஜிஆர் நகர் மார்க்கெட் சந்திப்பு, அழகர்சாமி சாலை சந்திப்பு, நெசப்பாக்கம் கழிவு நீரகற்று நிலைய பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் புதிய கழிவுநீர் குழாய் பதிக்கும் பணிகள் மற்றும் 10 எம்எல்டி திறன் கொண்ட மூன்றாம் நிலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய கட்டுமானப் பணிகளையும் 21.10.2021 அன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சென்னை மாநகரின் நீர் ஆதாரங்களை பாதுகாத்து நீர்மிகு நகரமாக உருவாக்க பல்வேறு விதமான நடவடிக்கைகள் தமிழ்நாடு அரசின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக நீர்நிலைகளின் நிலத்தடி நீர் மட்டத்தை அதிகரிக்கவும், நீர் சேமிப்பு திறனை அதிகப்படுத்தும் நோக்கில், சென்னை மாநகரில் பயன்படுத்தப்பட்டு வெளியேற்றப்படும் கழிவுநீரை மூன்றாம் நிலை சுத்திகரிப்பு முறையின் மூலம் சுத்திகரிப்பு செய்து பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள நீர் நிலைகளில் நிரப்பும் வகையில் திட்டமிடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக போரூரில் நிலைத்த நீராதாரம் உருவாக்க திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நெசப்பாக்கம் கழிவுநீரகற்று நிலையத்தில் ரூ.47.24 கோடி மதிப்பீட்டில் 10 எம்.எல்.டி. திறன் கொண்ட மூன்றாம் நிலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் மூலம் மூன்றாம் நிலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட நீர் போரூர் ஏரியில் நிரப்பும் வகையில் சுமார் 12 கிலோ மீட்டர் நீளத்திற்கு குழாய்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இத்திட்டப் பணிகள் சென்னை ஐ.ஐ.டி.யின் ஆலோசனையின்படி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதுவரை இந்தப் பணிகள் 88 சதவீதம் நிறைவு பெற்றுள்ளன. இயந்திரம் மற்றும் மின்சார சாதனங்கள் பொருத்தும் பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது. இந்தத் திட்டப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்த மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் ஜனவரி மாத இறுதிக்குள் இப்பணிகளை முடித்து சோதனை ஓட்டத்தை தொடங்க வேண்டும் என அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

முன்னதாக மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கோடம்பாக்கம் மண்டலம், அண்ணா பிரதான சாலை - எம்ஜிஆர் நகர் மார்க்கெட் சந்திப்பு பகுதியில் ரூ.2.20 கோடி மதிப்பீட்டில் பழுதடைந்த கழிவுநீர் குழாய்களை 120மி.மீ துரத்திற்கு மாற்றியமைத்து மாற்றுப் பாதையில் கழிவு நீர் குழாய்கள் அமைக்கும் பணிகளையும், மேலும் இவ்வழித்தடத்தில் அமைக்கப்படும் கழிவுநீர் குழாய்களில் இயந்திரங்கள் மூலம் பராமரிப்பதற்கு ஏதுவாக புதிதாக 3 நுழைவாயில்கள் அமைக்கப்பட்டு வருவதையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும், அண்ணா பிரதான சாலை அழகர்சாமி சாலை சந்திப்பில் ஏற்பட்டுள்ள பள்ளங்களை சீரமைக்கும் பணிகள் மற்றும் கழிவுநீர் குழாய்களை சீரமைக்கும் பணிகளையும், நெசப்பாக்கம் கழிவுநீரகற்று நிலையம் அருகில் ஏற்பட்டுள்ள பள்ளத்தை சீரமைக்கும் பணியினையும் பார்வையிட்டு ஆய்வு செய்து, பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் பணிகளை விரைந்து முடிக்க சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

**பின்னர் செய்தியாளர் சந்திப்பில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது** :

சென்னை மாநகரில் நாளொன்றிற்கு சுமார் 1000 எம்.எல்.டி. குடிநீர் 85 இலட்சம் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் நீர் சேமிப்பின் அவசியத்தை உணர்த்திடும் வகையில் கழிவு நீரினை சுத்திகரிப்பு செய்து சென்னை மாநகராட்சிப் பகுதிகளுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நீர்நிலைகளுக்கு கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முதற்கட்டமாக 800 எம்.எல்.டி அளவிலான கழிவுநீரினை சுத்திகரிப்பு செய்து மறுபயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கான தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டதன் காரணமாக இதுவரை 140 எம்.எல்.டி அளவிலான கழிவுநீர் சுத்திகரிப்பு செய்யப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உரிய ஆலோசனை பெற்று, சென்னை மாநகரில் வெளியேறக்கூடிய கழிவுநீரினை முழுவதுமாக சுத்திகரிப்பதற்கான சிறப்பு திட்டங்கள் வகுக்கப்படும். நெசப்பாக்கம் கழிவுநீரகற்று நிலையத்தில் கே..கே.நகர். பகுதியில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரில் 10 எம்.எல்.டி. கழிவுநீரை சுத்திகரிப்பு செய்து மறுசுழற்சி செய்யும் நிலையம் முதற்கட்டமாக அமைக்கப்பட்டு வருகிறது. இதிலிருந்து பெறப்படும் சுத்திகரிக்கப்பட்ட நீர் போரூர் ஏரியில் நிரப்பப்படும். இத்திட்டத்தின் சோதனை ஓட்டம் மற்றும் செயல்பாடுகளுக்கு பிறகு மாநகரின் பல்வேறு நீர்நிலைகளில் இதுபோன்ற சுத்திகரிப்பு நீரினை நிரப்பும் பணியினை மேற்கொள்ள திட்டம் வகுக்கப்படும்.

மேலும், பருவமழைக் காலத்திற்கு முன்னதாகவே கழிவுநீர் குழாய்களில் உள்ள அடைப்புகளை சீர்செய்யும் பொருட்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் கழிவுநீர் குழாய்களில் தீவிர தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், 50 ஆண்டுகளுக்கு மேற்பட்ட குழாய்கள், பழுதடையக் கூடிய நிலையில் உள்ள குழாய்களை மாற்றி புதிய குழாய்கள் அமைக்கவும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

பருவமழை காலத்தில் பொதுமக்களுக்கு ஏற்படும் இடர்பாடுகளை களையவும், புகார்கள் குறித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், வார்டு அளவில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தப் பணிகளை மேற்பார்வையிட மேற்பார்வை பொறியாளர்கள் கண்காணிப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது தென்சென்னை பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. தமிழச்சி தங்கபாண்டியன், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஏ.எம்.வி. பிரபாகர ராஜா, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குனர் திரு.சி.விஜயராஜ் குமார், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையாளர் திரு.எம்.எஸ்.பிரசாந்த், இ.ஆ.ப., தலைமைப் பொறியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்.
சென்னை குடிநீர் வாரியம்